## பத்திரிகை செய்தி

தமிழ்நாடு அரசின், சமூக நலத்துறையின் கீழ் வேலூர் மாவட்டத்தில், அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இயங்கும் ஒருங்கிணைந்த சேவை மையம் (ONE STOP CENTRE) - என்ற திட்டத்திற்கு பணியாளர்கள் சுழற்சிமுறையில் 24மணிநேரமும்(24X7) பணிபுரிந்திட வழக்கு பணியாளர் (Case Worker) (24X7), பாதுகாவலர்(Security) (24X7), மற்றும் பல்நோக்கு உதவியாளர் (Multipurposer) (24X7) பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் நேரடியாக வரவேற்கப்படுகின்றன.

வழக்கு பணியாளர்(தொகுப்பூதியம்-Rs. 18,000/-) காலிபணியிடத்திற்கான கல்வி தகுதி - பட்டப்படிப்பு(Master's of Social Work, Counselling Psychology or Development Management) மற்றும் கணினி இயக்கும் அனுபவம் பெற்று இருத்தல் அவசியம். பாதுகாவலர்(தொகுப்பூதியம்-Rs. 12,000/-) காலிபணியிடத்திற்கான கல்வி தகுதி - 8வது தேர்ச்சி (அ) 10வது தேர்ச்சி/தோல்வி மற்றும் பல்நோக்கு உதவியாளர் (தொகுப்பூதியம்-Rs. 10,000/-) காலிபணியிடத்திற்கான கல்வி தகுதி - 8வது தேர்ச்சி (அ) 10வது தேர்ச்சி/தோல்வி, நன்கு சமைக்க தெரிந்த பெண் பணியாளராகவும், மையத்தினை தூய்மையாக பராமரித்திடவும், உள்நுழைவோரின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்பவராகவும் இருத்தல் அவசியம்.

மேலும், மேற்கண்ட பணியிடங்களுக்கு 35 வயதிற்கு மிகாமலும், உடல் ஊனம் அற்றவராகவும், உள்ளூர் விண்ணப்பதாரராகவும் மற்றும் 2 வருடத்திற்கு மேலாக முன்அனுபவம் பெற்ற பெண் பணியாளராகவும் இருத்தல் அவசியம்.

விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தினை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் இணையதள முகவரியில் (www.vellore.nic.in) பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அல்லது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 14/7/25 அன்று மாலை 5.00 மணிக்குள் வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைந்துள்ள மாவட்ட சமூகநலத்துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3/7/25

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம். (3/3)

3/7/25

7/7/25